RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22477

OPEN ACCESS

# சமுதாய நோக்கில் கீழ்க்கணக்கு நூல்கள்

து. கலைச்செல்வி [அ, *]

[அ] தமிழ்த்துறை, அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, நாமக்கல்-637001, தமிழ்நாடு, இந்தியா.

# Eighteen Lesser Texts on Social Perspectives

D. Kalaiselvi [a, *]

[a] Department of Tamil Studies, Arignar Anna Government Arts College, Namakkal-637001, Tamil Nadu, India

* Corresponding Author: duraikalai1237@gmail.com

Received: 28-06-2022
Revised: 13-09-2022
Accepted: 25-09-2022
Published: 09-10-2022

Check for updates

**ABSTRACT**

Eighteen Lesser books are the literature that enriches the life of man. It is not only life to live, but it is better to live by living others. If man wants to succeed in his life, he has to overcome many adversities. The first step to success is to think before doing anything. Elements of life are essential for success in life. The essential aspects of life for such a society are found in the books of the following accounts. The purpose of this study is to explain them.

**Keywords:** Eighteen Lesser books, Tamil literature, Socity.

## முன்னுரை

சமுதாயம் என்பது பல குடும்பங்கள் சேர்ந்த அமைப்பாகும். மனித இனத்திற்கேயுரிய தனிப்பண்புகளுள் முதன்மையானது ஒழுக்கமாகும். மனித ஒழுக்கத்திற்கு அடிப்படையாக அமைவது கல்வியாகும். நட்புக்கு உரியவரை ஆராய்தலே நட்பாராய்தலாகும். முயற்சி வாழ்வின் உயர்ந்த சொல்லாகும். மானிட வாழ்வை உயர்த்திக்கொள்வதற்கு இவையெல்லாம் மிக மிக அவசியம். இத்தகைய வாழ்வியலுக்கு வழிகாட்டும் நன்னெறிகளை அறிவுறுத்துவதாக பதினெண்கீழ்கணக்கு நூல்கள் திகழ்கின்றன. சமூகத்தில் மனிதனாக வாழ இவை இன்றியமையாதன என்பதை இந்நூல்கள் வழியுறுத்துகின்றன.

## சமுதாயம் - விளக்கம்

உறவுமுறையிலான சில தனிமனிதர்கள் சேர்ந்த கூட்டமைப்பு குடும்பம், அதுபோல் பல குடும்பங்கள் சேர்ந்து இருப்பதே சமுதாயம். சமூகம் ஒரு குடும்பம் போன்றது என்பது காந்திஜியின் கருத்து. ஒவ்வொரு தனிமனிதனும் பிறருக்காகவும் தான் வாழும் சமுதாயத்திற்காகவும் அறநெறிகளையும், சிறந்த பண்புகளையும் பெற்றவனாகவும் வாழ வேண்டும். அப்படிப்பட்டவர்களால் மட்டுமே பிறரின் சுக துக்கங்களில் பங்கேற்று வழி நடத்த இயலும். மனிதநேயம் வளரும். சமுதாயம் என்பது ஒவ்வொருவரின் நன்மைக்காக கூடி வாழும் மனிதர்களை கொண்ட ஓர் அமைப்பாகும். சமுதாயம் ஸ்ரீ சமன் + ஆயம் ஸ்ரீ சமுதாயம். மனிதர்களும் மனிதர்களை சார்ந்ததுமே சமூகம் ஆகும்.

## சமுதாயமும் ஒழுக்கமும்

மனித இனத்திற்கேயுரிய தனிப்பண்புகள் பல, அவற்றுள் ஒழுக்கம் முதன்மையானதாகப் போற்றப்படுகிறது. ஒழுக்கம் என்னும் சொல்லிற்கு இடையறாது கடைப்பிடித்தல் என்பது பொருள். 'இடையறாது நீர் ஒழுகுவதை ஒழுங்கு என்று கூறுவதைப் போல வாழ்க்கையில் உயர்ந்தவையெனக் கருதப்படும் நெறிமுறைகளை எக்காலத்தும் எவ்விடத்தும் இடையறாது மேற்கொண்டொழுகுவதே ஒழுக்கமாகும்' (Thirunavu, 1977).

## ஒழுக்கம் விளக்கம்

ஒழுக்கம் குறிக்கும் மாரல் என்னும் ஆங்கிலச்சொல் மோர்சு என்ற இலத்தீன் மொழிச்சொல்லின் திரிபாகும். ஒரு சமுதாயத்தில் வாழும் மக்கள் வழக்கமாக கொள்ளும் முடிவை ஒழுக்கமாகக் கொண்டனர். ஒழுக்கம் என்னும் சொல் சீலம், நன்னடத்தை, ஆசாரம், உயர்ச்சி முறைத்தன்மை, உலகம் ஒம்பிய நெறி போன்றப் பல பொருள்களைத் தருகின்றது.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்" (Manikkanar, 2006)

மனிதனை விலங்கிடமிருந்து பிரித்துக் காட்டுவது ஒழுக்கவுணர்வு, மண்ணில் வாழும் மனிதர்களுக்கெல்லாம் ஒழுக்கம் உயிரைக்காட்டிலும் மேலானதாகும். நல்லொழுக்கம் ஒருவனுக்கு மேன்மையைக் கொடுப்பதால் நல்லொழுக்கம் உயிரை விடவும் மேலானதாகக் கருதப்பட்டும் காப்பாற்றப்படுதல் வேண்டும் என வள்ளுவப் பெருந்தகை வலியுறுத்துகிறார்.

மானுடவர்க்கம் தனி மனித ஒழுக்கத்தால் மேம்பாடடைவதே தனிமனித ஒழுக்கமாகும். சமுதாய ஒழுக்கத்திற்கு அடிப்படையாக விளங்குவதும் இதுவேயாகும். தனிமனிதன் ஒழுக்க நெறிப்படி நடந்து வருவானானால் சமுதாயத்தில் மனிதர்களின் எண்ணிக்கை வளரும். அதுவே நாளடைவில் சிறந்த மனிதர்களை உருவாக்கச் செய்யும். மனிதர்கள் என்ற பெயரில் மனித உருவங்கள் உலா வருவதும் குறையும்.

ஒருவன் ஒழுக்கத்தால் தன்னையும் தன்னைச் சார்ந்தவர்களையும் மேம்பாடடையச் செய்யலாம். "தனிமனித ஒழுக்கம் சமுதாயத்தோடு தொடர்பு உடையது என்பதனை குன்றக்குடி அடிகளார், ஒழுக்கம் என்பது ஒன்றல்ல - இரண்டல்ல பல கூறுகளை உடையது எனினும் இரண்டு பெரும் பிரிவாக ஒழுக்க நெறியை வகைப்படுத்தலாம். தனிமனிதன் தன்னுடைய வாழ்க்கை வட்டத்தில் தனக்காகக் கடைப்பிடிக்கும் ஒழுக்கம் ஒன்று, பிறிதொன்று தனிமனிதன் தான்வாழும் சமுதாயத்தோடு தொடர்பு கொள்ளும் முறையில் கடைபிடிக்கும் ஒழுக்கமாகும்' (குன்றக்குடி அடிகளார், 1996).

## கல்வியும் சமுதாயமும்

மனித ஒழுக்கத்திற்கு அடிப்படையாக அமைவது கல்வியாகும். கல்வியின் வாயிலாகப் பெரும்பான்மையான நல்ஒழுக்கத்தைப் பெற முடியும்.

'நாளும் நகை போகான் கற்றல் மிக இனிதே' (Dhandapani, 2021)

ஒவ்வொரு நாளும் அறிவொழுக்கங்களைத் தரும் நல்ல நூல்களைப் படிப்பதே இனிமைத் தரும் என்கின்றார்.

'விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்

கற்றாரோடு ஏனை யவர்' (Manikkanar, 2006)

என்னும் குறள், புகழ்பெற்ற நல்ல நூல்களைக் கற்றவரே மாந்தராவார், கல்லாதவர் விலங்குகள் ஆவர் என்கின்றார். ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கு கல்வியானது இன்றியமையாத ஒன்றாகும். கல்வி குறித்து நான்மணிக்கடிகை கூறும் போது,

'ஒருவருக்கு கற்றலின் வாய்த்த பிறவில்லை'

ஒருவனுக்கு அவனின் வாழ்க்கையின் இறுதிவரை பயன்தரக்கூடியது கல்வி மட்டுமே ஆகும். மேலும் நிலையான செல்வமும் அதுவேயாகும் என்று கூறுகின்றன. மேலும்,

'கற்றறிந்தார் கண்ட அடக்கம் அறியாதார்

பொச்சாந்து தம்மைப் புகழ்ந்துரைப்பார் - தெற்ற

அறைதல் அருவி அணிமலை நாட

நிறைகுடம்; நீர் தளும்பல் இல்'

கல்வி அறிவு பெற்ற ஒருவனாலேயே அடக்கமுடன் நடந்து கொள்ள முடியும், நிறைகுடம் நீர் தளும்பாது, அதுபோல் நிறைந்த கல்வியறிவுடையவர் அடங்கி நடப்பர். குறைகுடம் நீர் தளும்புவது போல கல்வியறிவு நிரம்பப் பெறாதார் அடங்கி நடக்க மாட்டார் என்று பழமொழி நூல்கள் கல்வி குறித்து கூறுகின்றது (Aravanan, 2011).

## சமூகத்தில் நட்பு பெறும் இடம்

ஒத்த கருத்து, நலன், அக்கறை முதலியவற்றின் அடிப்படையில் உறவினர் அல்லாதவருடன் கொள்ளும் 'உறவு' நட்பாகும் என்று க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி பொருள் விளக்கம் தருகின்றது. நபர்கள் அல்லது நாடுகளுக்கு இடையிலான நேச உறவு நட்புறவு என்றும் கூறப்படுகின்றது. மேலும் தோழன் என்பதற்கு நண்பன் என்றும், தோழமை என்ற சொல்லுக்கு நட்பு என்றும் பொருள் தருகின்றது.

நட்பு என்பதற்கு 'சிநேகம்' என்று தமிழ் லெக்ஸிகன் அகராதி பொருள் கூறுகின்றது. நட்பு என்பதற்கு 'நள்' எனும் பகுதியின் அடியாகப் பிறந்தது. நட்புக்கு உரியவரை ஆராய்தலை நட்பாராய்தலாகும். நட்டார், நட்டோர், நட்பண், நண்ணு, நனி, நண்பினன், நண்பினோர் நண்பன், நள்ளார், நள்ளாதார் எனும் சொற்கள் இலக்கியத்தில் பயின்று வந்துள்ளன.

## முயற்சி

சமுதாயத்தில் வாழும் ஒவ்வொருவரும் தம் வாழ்க்கையில் முயற்சி உடையவராய் இருக்க வேண்டும் என்பதை நாலடியார் வலியுறுத்துகிறது. துவள்கின்ற சிறு மரமும் முற்றிய காலத்தில் ஆண் யானைகளைக் கட்டுதற்குரிய கட்டுத்தறியாக அமையும், அதுபோல ஒருவன் முயற்சியால் தன்னை ஆற்றலில் குறைவில்லாமல் செய்து கொள்வானாயின் அவன் தன்னுடைய வாழ்க்கையில் பெருமை அடைவான் என்பதை,

'ஆடுகோடாகி அதரிடை நின்றதூஉம்

காழ்கொண்ட கண்ணே களிறணக்குங் கந்தாகும்

வாழ்தலும் அன்ன தகைத்தே ஒருவன் றான்

தாழ்வின்றித் தன்னைச் செயின்' (Aravanan, 2011)

என்ற பாடலில் வெளிப்படும் உவமையின் மூலம் அறிந்து கொள்ளலாம். கரையானால் அரிக்கப்பட்ட ஆலமரத்தை அதன் விழுதுகள் தாங்கி நிற்பது போல தந்தையின் தளர்ச்சியைக் காத்தற்கு மைந்தன் முயற்சியுடையவனாய் இருத்தல் வேண்டும். இவ்வாறு தன் முயற்சியால் உண்டான நீருணவு என்றாலும் அஃது அமிழ்த ஆற்றல் உடையதாய் நலம் பயக்கும்.

## முடிவுரை

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய இலக்கியங்களில் பெரும்பாலும் சமுதாயத்திற்கு தேவையான அறநெறிகளையே வலியுறுத்துகின்றன. அவற்றில் சமுதாயத்திற்கு தேவைப்படும் வாழ்வியல் கூறுகளான கல்வி, ஒழுக்கம், நட்பு, முயற்சி ஆகியவற்றை விளக்கும் நூல்களாக நீதி நூல்கள் காணப்படுகின்றன. அவற்றின் வழி பின்பற்றி வாழ்ந்தால் சமுதாயம் சிறப்படையும் என்பதை விளக்குவதாக இவ்வாய்வானது அமைந்துள்ளது.

## References

Aravanan, K.P. (2011) Naladiyar, Tamil Kottam, Chennai, India

Dhandapani, D. (2021) Inna Narpadhu Iniyavai Narpadhu Moolamum Uraiyum, Uma Pathippagam, Chennai, India

Manikkanar, V.S. (2006) Thirukural Moolamum Uraiyum, Saradha Pathippagam, Chennai, India

Thirunavu, K.T. (1977) Thirukuaral Neethi Ilakiyam, Madras University, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License